THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 8th August 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

List of Jawans and families

*191 Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a survey has been conducted districtwar to get a detailed list and addresses of the families of the Jawans; and

(*b*) if so, the types of help, assistance and concessions that have been proposed to be extended to the members of these families?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) A survey has already been completed in most of the districts. Lists of Jawans and the addresses of their families are available in the Offices of the District Collectors and in the District Soldiers' Sailors' and Airmen's Boards;

(*b*) The nature of help, etc., rendered to the families of jawans are in brief, assigning lands, providing financial help, educational and medical concessions.

திரு. வை. சங்கரன்: ஒருசில இடங்களில் ஜவான்களுடைய குடும்பத்திற்கு அவ்வப்போது அங்கிருந்து சம்பளமோ, பணமோ வராமல் இருக்கிறது என்ற புகார்கள் வரும்போது, அது போன்ற புகார்களைப் பரிசீலித்து, பணம் வழங்கவில்லையென்றால் இந்த அரசாங்கத்திலிருந்து அட்வான்ஸ் மாதிரி அவர்களுக்குக் கொடுப்பதற்குத் திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பாதிக்கப்பட்டவர்கள் கலெக்டருக்குத் தெரிவித்தால், அவர்கள் கவனித்து வேண்டியதைச் செய்வார்கள்.

திரு. செ. மாதவன்: இந்தப் புறம்போக்கு நிலங்களை அசைன்மென்ட் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது, மனுக்கள் கொடுத்தும் கூட. ரெகவரி ஆப் டெட்சைப்பற்றி வழக்குப் போடலாம் என்பதை முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

[8th August 1966

திரு. டி. கார்ச்சா கவுடர் : நீலகிரி ஜில்லாவில் பூமிகளைக் கொடுப்பதில் தடை இருக்கிறது. ராணுவத்தினர் குடும்பத்தினருக்கு 5 ஏக்கர், 10 ஏக்கர் நிலங்களைத் தடையில்லாமல் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தடை எந்தக் காரணத்திற்காக இருக்கிறது என்பதைப் பார்த்துத்தான் நீக்க முடியும். ஸ்லோப் அதிகமாக இருந்தால், அதில் யாராக இருந்தாலும் பயிர் செய்வதற்கு விடுவதில்லை.

திரு. வை. சங்கரன் : இதிலே கொடுக்கப்படுகிற சலுகைகள் எல்லாம் ஆக்சுவலாக ராணுவத்தில் இருப்பவர்களுக்குத்தானு அல்லது எக்ஸ்-சர்விஸ்மென் குடும்பத்திற்கும் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எக்ஸ்-சர்விஸ்மென் குடும்பத்தினருக்கும் ஓரளவு கொடுக்கப்பட்டு வருகிறது.

தங்கப்பத்திரத் திட்டம்

*192 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தங்கச் சேமிப்புத் திட்டத்துக்குப் பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் தருமாறு எல்லா அறநிலையங்களுக்கும், ஆதீனங்களுக்கும் அறநிலையப் பாதுகாப்புக் குழுவினரால் அறிக்கை அனுப்பப்பட்டதா ?

(இ) அதன் விளைவாகக் கிடைத்த பலன் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Communications have been forwarded by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department.

(*b*) 1,07,427.624 grams of gold have so far been subscribed by the religious institutions.

Gold refinery project

*193 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to establish a gold refinery project in Guindy; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) With a view to make 14 carat gold available to small manufacturers, individual goldsmiths or artisans and Industrial Co-operative Societies for goldsmiths, an Industrial Co-operative Society has been organised at Madras to run a Gold Refinery. There are 82 members in the Society at present. It is located in a rented building at Guindy. A working capital loan of Rs. 3 lakhs